The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

December 2014

Vol. 18 No. 12




Our Bishop with Holy Father Pope Francis on the Day of Canonization 23.11.2014


Thanks for the God's Grace You Bring to the Diocese





அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு

30 Nov 2014 to 02 Feb 2016



Happy Christmas
and
Happy New Year


IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

**For Private Circulation only**

Published By : Fr. Joseph Santhosh, for the Diocese of Thuckalay
Bishop's House, Post Box No . 12, Thuckalay - 629 175

Printed at : Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570

Bishop George Rajendran sdb
DIOCESE OF THUCKALAY

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District - 629175
Tamil Nadu, India

## BISHOP'S ENGAGEMENTS DECEMBER 2014

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 2 | Tuesday | 4.00 pm | Soosaipuram School Day |
| 3 | Wednesday | 11.00 am<br>6.00 pm | KKSSS GB meet<br>Kaisalavilai: Holy Qurbana, St. Francis Xavier, |
| 5-7 | | | Bible Convention |
| 5 | Friday | 6.00 pm | Trivandrum: CMI school Anniversary |
| 7 | Sunday | 4.00 pm | Marthandam: Yesuvai Kanbom |
| 8 | Monday | 10.00 am | Bishop's House: Meeting CMI deacons |
| 9 | Tuesday | | Bishop's House |
| 10 | Wednesday | 9.30 am | Bishop's House Curia Meeting |
| 11 | Thursday | | Bishop's House |
| 12 | Friday | 2.30 pm | Holy Qurbana: Death Anniversary<br>of Fr. Thomas Thekkeyil |
| 13 | Saturday | 8.00 am<br>10.00 am | KII Christmas Gathering<br>Special Schools meeting |
| 14 | Sunday | 8.00 am | Pala: Thuckalay Friends Meet |
| 15 | Monday | 2.00 pm | Changanassery: Graduation Day |
| 17 | Wednesday | | Angamaly |
| 18 | Thursday | 9.30 am | Pre-Christmas Gathering for Presbyterium |
| 19 | Friday | | Bishop's House |
| 20 | Saturday | 2.30 pm<br>4.00 pm | KKSSS Christmas celebrations<br>Blessing of SABS chapel |
| 21 | Sunday | 7.00 am | Varuthattu: Holy Qurbana |
| 22 | Monday | 2.00 pm | Marthandam: Christmas Gathering |
| 23 | Tuesday | 5.00 pm | Melpuram: Christmas Programme |
| 24 | Wednesday | 9.30 am<br>11.30 pm | Bishop's House: Curia Meeting<br>Marthandam: Night Vigil Holy Qurbana |
| 25 | Thursday | 7.00 am | Perumchilambu: Holy Qurbana |
| 26,27 | | | Bishop's House |
| 28 | Sunday | | Trivandrum: CMI Ordinations |
| 29,30 | | | Thanjavur: Jubilee Celebrations |
| 31 | Wednesday | | Karode: Night Vigil Holy Qurbana |

**இறையருள் செய்திகள் மற்றும் விமர்சனங்களுக்கு**
***iraiarultkly@gmail.com***




# இறையருள்
# IRAIARUL

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY

Volume 18 No : 12 December 2014



## Editorial Board

*Patron*
His Excellency
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. K.J. Antony SDB**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**



Published by
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay.**
**Ph:04651-252570**


## உள்ளே...


| | |
|---|---|
| திருத்தந்தையிடமிருந்து... | 2 |
| உயர் பேராயர் திருமுகம் | 6 |
| Birthdays & Feast Days | 16 |
| நற்செய்தி நிலையம் | 17 |
| குழந்தை ஈசோ | 22 |
| இளைஞர் இயக்கம் | 23 |
| இல்வாழ்வு இயக்கம் | 25 |
| மறைமாவட்ட தினவிழா | 27 |
| வின்சென்ட் தே பவுல் சபை | 28 |
| சமூக சேவை.. | 29 |
| கல்விப் பணித்தளம் | 31 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 32 |
| நன்றியறிதல் விழா | 33 |
| விழுதுகள்-4 | 35 |
| தக்கலை தீபம்-6 | 39 |
| வரலாற்றுச் சுவடுகளில்-8 | 41 |
| வரலாறு அறிவோம்-7 | 43 |
| உள்ளங்களில் கிறிஸ்து... | 50 |
| Bishop's Engagements | 52 |

**உலக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ள சிறப்பு மடல்**



அர்ப்பண வாழ்வை மேற்கொண்டவர்கள், வரலாற்றை நன்றியோடு ஏற்கவும், நிகழ்காலத்தை ஆழ்ந்த ஆர்வத்தோடு வாழவும், வருங்காலத்தை நம்பிக்கையோடு எதிர்கொள்ளவும் வேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

நவம்பர் 30 ஞாயிறு முதல், 2016ம் ஆண்டு, பிப்ரவரி 2ம் தேதி முடிய கத்தோலிக்கத் திருஅவையில் சிறப்பிக்கப்படும் உலக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வெள்ளியன்று சிறப்பு மடல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அம்மடலின் சுருக்கம் இதோ:

அர்ப்பணிக்கப்பட்ட சகோதரிகளே, சகோதரர்களே,

‘உன் சகோதரர்களை உறுதிப்படுத்து’ (லூக்கா 22,32) என்று புனித பேதுருவுக்கு இயேசு கூறிய அறிவுரையின்படி, பேதுருவின் வழித்தோன்றல் என்ற முறையிலும், அர்ப்பண வாழ்வை மேற்கொண்டுள்ள ஒரு சகோதரன் என்ற முறையிலும் நான் உங்களுக்கு இம்மடலை எழுதுகிறேன்.

2ம் வத்திக்கான் சங்கத்தால் உருவாக்கப்பட்ட ‘மக்களின் ஒளி’ (Lumen Gentium) என்ற ஏடு வெளியிடப்பட்ட 50ம் ஆண்டைச் சிறப்பிக்கும் ஒரு முயற்சியாக, உலக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டைக் கொண்டாட நான் அழைப்பு விடுத்தேன். நவம்பர் 30, திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறன்று துவங்கும் இந்த உலக ஆண்டு, 2016ம் ஆண்டு, பிப்ரவரி 2ம் தேதி, ஆண்டவர் கோவிலில் அர்ப்பணிக்கப்பட்ட திருநாளன்று நிறைவுபெறும்.

இவ்வாறு துவங்கும் இச்சிறப்பு மடலில், திருத்தந்தை,

1. அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டின் குறிக்கோள்கள்
2. அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டின் எதிர்பார்ப்புகள்



3. அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் தொடுவானங்கள்

என்ற மூன்று பகுதிகளில் தன் கருத்துக்களைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

**அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டின் குறிக்கோள்கள்:**

வரலாற்றை நன்றியோடு ஏற்பது, முதல் குறிக்கோள். ஒவ்வொரு துறவு சபையின் வரலாறும், தனி வரங்களும் செறிவுமிக்கவை. இச்செல்வங்களை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்ப்பது அவசியம். இந்த வரலாற்றில் உருவான குறைகளையும், சரியான கண்ணோட்டத்துடன் பார்த்து, பாடங்களைப் பயிலவேண்டும். குறிப்பாக, 2ம் வத்திக்கான் பொதுச் சங்கத்திற்குப் பிறகு, கடந்த 50 ஆண்டுகள், தூய ஆவியாரின் புதிய ‘மூச்சுக் காற்று’ ஏற்படுத்தியுள்ள மாற்றங்களைக் காண்பது மிகவும் அவசியம்.

நிகழ்காலத்தை ஆழமான ஆர்வத்துடன் வாழ்வது, 2வது குறிக்கோள். ஒவ்வொரு துறவுச் சபையையும் நிறுவியவர்கள், இயேசுவின் மீதும், அவரது பணியின் மீதும் கொண்டிருந்த ஆழமான ஆர்வம், நம் வாழ்வில் தொடர்ந்து வெளிப்படவேண்டும். இந்த ஆர்வம் நம்மிடையே குறைந்து, மங்கிப் போய்விட்டதா என்பதை ஓர் ஆன்ம ஆய்வாக மேற்கொள்ள உலக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு ஒரு தகுந்த வாய்ப்பு.

எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அரவணைப்பது, 3வது குறிக்கோள். மேற்கத்திய நாடுகளில் இறையழைத்தல் குறைந்து, அர்ப்பண வாழ்வில் ஈடுபட்டுள்ளோரின் சராசரி வயது கூடியுள்ளது. பொருளாதார நெருக்கடி, அரசியல் மாற்றங்கள், எதையும் நிரந்தரமற்றதாய் காணும் மனநிலை ஆகியவை, இன்றைய உலகில் வளர்ந்துள்ளன.

இத்தகையச் சூழலில், நமது அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் நம்பிக்கை எங்கிருந்து வருகிறது என்பதை உணரவேண்டும். எண்ணிக்கை, வெற்றி என்று இவ்வுலகம் காட்டும் அளவுகோல், நமது நம்பிக்கையைப் பாதிக்காமல், இறைவனில் நம்பிக்கை கொள்ளவேண்டும். எல்லாமே அழிவு என்று இவ்வுலகம் பறைசாற்றும் கருத்துக்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது.

இவ்வாறு, தன் குறிக்கோள்களை எடுத்துரைத்தத் திருத்தந்தை, 2வது பகுதியில், அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டின் எதிர்பார்ப்புக்களாக 5 எண்ணங்களை முன்வைத்துள்ளார்:

## அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டின் எதிர்பார்ப்புகள்:

1. அர்ப்பணிக்கப்பட்டோர் இருக்கும் இடத்தில் ஆனந்தம் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன். உலக மக்களைப் போலவே, அர்ப்பண வாழ்வில் ஈடுபட்டுள்ளோருக்கும் பிரச்சனைகள் உண்டு. ஆனால், இறைவனில் நம்பிக்கை கொண்டு, இந்தப் பிரச்சனைகளைத் தாண்டி, துறவியர் மகிழ்வை வெளிப்படுத்த வேண்டும்.

2. அர்ப்பணிக்கப்பட்டோர் இவ்வுலகை விழித்தெழச் செய்வர் என்று எதிர்பார்க்கிறேன். ஒவ்வொரு துறவுச் சபைக்கும் வழங்கப்பட்டுள்ள தனி வரங்களின் அடிப்படையில் இவ்வுலகை மாற்றுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஒரு கனவுலகை (Utopia) அல்ல, மாறாக, ஒரு மாறுபட்ட உலகை உருவாக்குவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

3. 'ஒன்றிப்பின் அறிஞர்களாக' (Experts of Communication) அர்ப்பணிக்கப்பட்டோர் வாழ்வர் என்று எதிர்பார்க்கிறேன். தாங்கள் வாழும் குழுமங்களில் இந்த ஒன்றிப்பு துவங்கவேண்டும். புறம்பேசுதல், பொறாமை, வன்மம் ஆகியவை, துறவற இல்லங்களில் இருப்பதற்குத் தகுதியற்ற பண்புகள். துறவு சபைகள் ஒன்றோடொன்று ஒன்றிப்பை வளர்ப்பதையும் இவ்வாண்டு நான் எதிர்பார்க்கிறேன்.

4. அர்ப்பணிக்கப்பட்டோர், இவ்வாண்டில், சமுதாயத்தின் விளிம்புகளுக்குச் செல்வதை எதிர்பார்க்கிறேன். துறவு இல்லங்களில் உருவாகும் கருத்து வேறுபாடுகளில் சிறைப்பட்டு போகாமல், சமுதாயத் தேவைகளை முன்னிறுத்தும் வழிகளை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

5. திருஅவைக்கு, குறிப்பாக, துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு உதவும் பணிகளில் ஈடுபட துறவு சபைகள் ஒன்றிணைந்து வருவதை எதிர்பார்க்கிறேன். உலக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு, ஒரு தனிப்பட்ட, உன்னத காலமாக இருக்க, இறையாவியாரின் அருளை எதிர்பார்க்கிறேன்.

இச்சிறப்பு மடலில், 'அர்ப்பண வாழ்வின் தொடுவானங்கள்' என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைப்பிட்டுள்ள மூன்றாவது பகுதியில், அர்ப்பண வாழ்வு, இன்னும் எவ்வாறு வேறு வழிகளில் தன் எல்லைகளை விரிவாக்க முடியும் என்பதை 5 கருத்துக்களாகப் பகிர்ந்துள்ளார்:



## அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் தொடுவானங்கள்

1. அர்ப்பணிக்கப்பட்டோர் மட்டுமல்லாமல், பொது நிலையினருக்கும் நான் விண்ணப்பிக்கிறேன். துறவு சபைகள், பொது நிலையினரோடு இணைந்து பணியாற்றுவது வரலாற்று உண்மை. அர்ப்பண வாழ்வை வேறு வழிகளில் தேர்ந்துள்ள பொதுநிலையினருக்கும் நான் இந்த சிறப்பு ஆண்டில் விண்ணப்பிக்கிறேன். உங்கள் தனி வரங்களுடன் ஒருவர் ஒருவருக்கு உறுதுணையாக இருங்கள்.

2. உலக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டு, அர்ப்பண வாழ்வில் ஈடுபட்டுள்ள துறவியருக்கு மட்டுமல்ல, மாறாக, அனைத்துலக திருஅவைக்கும் ஒரு சிறப்பான ஆண்டு. புனிதர்களான பெனடிக்ட், பேசில், அகஸ்டின், பிரான்சிஸ், தோமினிக், லொயோலா இஞ்ஞாசியார், அவிலா தெரேசா, ஆஞ்செலா மெரிசி, வின்சென்ட் தே பால் ஆகியோர் இல்லாத திருஅவையை எண்ணிப்பார்க்க இயலாது. புனித ஜான் போஸ்கோ, முத்திப்பேறு பெற்ற அன்னை தெரேசா என்று, இந்தப் பட்டியல் மிக நீளமானது. இத்தனைப் புனிதர்களின் உதவியால், திருஅவை வளர்ந்துள்ளதற்காக இறைவனுக்கு நன்றி சொல்ல அனைவரையும் அழைக்கிறேன்.

3. கத்தோலிக்கப் பாரம்பரியத்தைச் சேராத கிறிஸ்தவ பாரம்பரியத்திலும், குறிப்பாக, ஆர்த்தடாக்ஸ் பாரம்பரியத்திலும் அர்ப்பண வாழ்வை மேற்கொண்டுள்ள அனைவருக்கும் இம்மடல் வழியே நான் அழைப்புவிடத் துணிகிறேன். இந்தச் சிறப்பு ஆண்டில், கிறிஸ்தவ ஒன்றிப்பு, இன்னும் தழைத்து வளர முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று நம்புகிறேன்.

4. துறவு என்ற நிலைப்பாடு, அனைத்து பெரும் மதங்களில் காணப்படும் ஓர் உண்மை. அனைத்து மதங்களுடனும் இன்னும் ஆழமான உறவு வளர்வதற்கும் இவ்வாண்டு ஒரு வாய்ப்பாக அமையவேண்டும்.

5. இறுதியாக, என் சகோதர ஆயர்களுக்கு நான் விண்ணப்பிக்கிறேன். அர்ப்பண வாழ்வும், ஒவ்வொரு துறவுச் சபையின் தனிவரங்களும் திருஅவைக்கு இறைவன் வழங்கியுள்ள கொடைகள் என்பதை ஆயர்கள் உணர்ந்து, ஏற்றுக்கொண்டு, துறவுச் சபைகளை உற்சாகப்படுத்த அழைக்கிறேன்.

ஆழ்நிலை தியானம், ஆண்டவனுக்குச் செவிமடுத்தல் என்ற உன்னத பண்புகளின் எடுத்துக்காட்டான மரியன்னையிடம் இந்த உலக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு ஆண்டை ஒப்படைக்கிறேன்.

# உயர் பேராயரின் கடிதம்

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர், ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி, அனைத்து பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் குருக்களுக்கும் இருபால் துறவியருக்கும் பொதுநிலையினருக்கும் எழுதுவது. ஆண்டவரின் அருள் உங்களோடு இருப்பதாக

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய சகோதரர் சகோதரிகளே,

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2014 நவம்பர் 30 முதல் 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி 02 ஆம் தேதி வரை துறவற ஆண்டாக அறிவித்து இருக்கிறார். இச்சூழலில், துறவற வாழ்வு குறித்து சில சிந்தனைகளை நான் முன்வைக்கிறேன். இச்சிந்தனைகள், துறவற ஆண்டில் மேற்கொள்ள இருக்கின்ற அனைத்து பயிற்சிகளுக்கும், கருத்தரங்குகளுக்கும் உறுதுணையாக அமைவதாக!

துறவற வாழ்வு திருச்சபையின் தொடக்க காலம் முதல் இருந்து வந்திருக்கிறது. இயேசுவை பின்பற்றுதல் அல்லது இயேசுவை பின்தொடர்தல் இதுவே கிறிஸ்தவ துறவற வாழ்வின் அடிநாதமாக இருந்து வந்திருக்கிறது. இறைவனின் அழைப்பைப் பெற்றவர்கள் என்னும் நிலையில் மட்டுமே துறவற வாழ்வை நம்மால் காணமுடியும். மேலும், துறவறவாழ்வு என்பது, தந்தைக்கடவுளால் தூய ஆவி வழியாக திருச்சபைக்கு தரப்பட்டிருக்கும் கொடை. கடைசி இரவுணவின் வேளையில் இயேசு மொழிந்தார், "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை; நானே உங்களை தேர்ந்துகொண்டேன்" (யோவா 16: 16). தம்மைப் பின்தொடர இயேசு மக்களை அழைக்கிறார். இவ்வாறாக அழைக்கப்பட்டவர்கள் தங்களுக்கென்று இருப்பவை அனைத்தையும் முற்றிலுமாக துறக்க வேண்டும் என்றும் இயேசு வேண்டுகோள் வைக்கிறார். தனக்கென முக்கியமாக கருதுகின்ற அனைத்தையும் துறப்பதே, சீடராக வாழ்வதற்கான அடிப்படைத் தகுதி என்பதை இயேசு திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார்.

முழு சுதந்திரத்துடன் முற்றும் துறந்து, இயேசுவைப் பின்தொடர்ந்து, நற்செய்தியின் விழுமியங்களுக்கு ஏற்ப வாழ்வை



முற்றிலும் அர்ப்பணித்த மனிதர்களை திருச்சபையின் தொடக்க காலத்திலிருந்தே நம்மால் காண முடியும். தனித்து வாழ்தல், வனங்களில் வாழ்தல், பிறர் ஈகையில் வாழ்தல், மடாலயங்களில் வாழ்தல் என பல்வேறு விதமான துறவற வாழ்வுகளை நாம் திருச்சபையின் வரலாற்றில் காணலாம். இவற்றுள், மடாலய வாழ்வும் சமூக வாழ்வும் பிரபலமாயின.

பிற சமய துறவற வாழ்வுகளோடு, கிறிஸ்தவ துறவற வாழ்வு ஒருசில காரியங்களில் ஒத்துப்போயினும், கிறிஸ்தவ துறவற வாழ்வு பல வேறுபாடுகளைக் கொண்டது. உலக பற்று அறுத்து வாழ்தல் இந்து மற்றும் புத்த மதங்களில் நாம் காணலாம். உலக பொருள்களின் மீதான ஆசைகளை துறந்து வாழ்தலே துறவற வாழ்வு என்னும் பிரபலமான கருத்தை, கிறிஸ்தவத்திலும் 20 ஆம் நூற்றாண்டின் பாதிவரை நம்மால் காணமுடியும். அதுவே, முக்கிய நோக்கமாகவும் பார்க்கப்பட்டது. கடவுளை நெருக்கமாக பின்பற்ற வேண்டுமெனில் உலக காரியங்களில் ஈடுபடக்கூடாது என்னும் மனநிலையே இத்தகையதொரு வாழ்க்கை முறைக்கு அடிப்படையாக அமைந்தது. 1950களுக்குப் பிறகு, நற்செய்தியை அடிப்படையாகக் கொண்ட துறவற வாழ்வு குறித்த புரிதல்கள் தெளிவாக்கப்பட்ட போது, இறையரசின் மீது உறுதியான பற்று வேண்டும் என்பது துறவற வாழ்வின் இயல்பாக பரிணமிக்கத் தொடங்கியது. இறைதிருவுளத்திற்கு இணங்கி வாழும் ஒரு முழு ஈடுபாடு வாழ்வே துறவற வாழ்வு என்னும் கருத்தாக்கம் அழுத்தம் பெற்றது.

துறவற வாழ்வை மேற்கொள்வதற்கு இயேசுவே மாதிரி. இயேசு 'உண்பவராகவும் குடிப்பவராகவும்' மக்களின் மத்தியில் வாழ்ந்தார். வறியவராய்ப் பிறந்த அவர் வறியவர்கள் மத்தியில் வாழ்ந்தார். தந்தைக் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவராக வந்த அவர், கற்பு தவறாது வாழ்ந்தார். அவருடைய வாழ்வு முழுமையான கீழ்ப்படிதலின் வாழ்வாக அமைந்தது. அதனாலேயே, ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல், ஆகிய வாக்குறுதிகளை எடுப்பவர்களை, திருச்சபையும் துறவறத்தார் என அழைத்தது. அவர்களே, மடாலய வாழ்வு வாழ்பவர்களாக கருதப்பட்டார்கள். செபம், இறையரசைக் குறித்த நற்செய்தியை அறிவித்தல், பாவிகளை மனந்திரும்ப செய்தல், குழந்தைகளை ஆசீர்வதித்தல், பிறருக்கு நன்மை செய்தல்

மேலும் தந்தைக்கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுதல் ஆகியவற்றை துறவற வாழ்க்கையின் நோக்கங்களாக இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் சுட்டிக்காட்டியது.

ஒவ்வொரு துறவற சமூகமும் தனிவரம் கொண்டதாய் இருக்கிறது. அவற்றின் நிறுவனர்களே அதனுடைய தனிவரத்தை விவேகித்தறிந்தார்கள். அச்சமூகத்தில் உறுப்பினராக இணைவோர், அத்தனிவரத்தை உணர்ந்தவர்களாய், அதை ஏற்று வாழ்க்கை மேற்கொள்கிறார்கள். ஒவ்வொரு தனிவரமும் நற்சய்தியை அடிப்படையாகக் கொண்டது, மேலும் அவை இயேசுவால் பறைசாற்றப்பட்டு சாட்சியப்படுத்தப்பட்டவை. நற்செய்தி அறிவித்தல், கல்வி, நோயாளிகளை கவனித்தல், கைவிடப்பட்டோரை பேணுதல் போன்றவை இத்தனிவரங்களுள் சில. இத்தனிவரத்தை இயல்பாய் பெற்ற, இத்துறவற சமூகங்கள் பல நிறுவனங்களை ஏற்படுத்தி தத்தமது பணியை மேற்கொண்டு வருகிறார்கள். திருச்சபையின் அன்பின் செயல்கள் இத்துறவற சமூகத்தாரால் மெய்ப்பிக்கப்படுகின்றன. நற்செய்தியின் படிப்பினைகளுக்கு ஏற்ற சாட்சிய வாழ்வு துறவறத்தார் மேற்கொள்வதாலேயே, இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம், துறவற சமூகங்களுக்கு திருச்சபையில் தனிப்பெரும் பங்கு உண்டு என அறிவுறுத்துகிறது. (திருச்சபை குறித்த ஏடு 43, துறவற வாழ்வு 1).

குருக்களுக்கான துறவற சமூகங்கள் உண்டு. கற்பு வாழ்வை மேற்கொள்ளும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான துறவற சமூகங்களும் உள்ளன. அதைப்போன்று, கற்பு வாழ்வை மேற்கொண்டு நற்செய்திப் பணி செய்தவாறு சமூகத்தில் வாழ்ந்து அர்ப்பண வாழ்வு மேற்கொள்வோரும் உள்ளனர். இச்சமூகங்களைச் சார்ந்தவர்கள் வருடத்திற்கு ஒருமுறை சமூகமாக கூடிவந்து தங்களது உறவையும் அர்ப்பண வாழ்வையும் புதுப்பித்துக் கொள்வார்கள். கடவுளின் மாட்சியை பறைசாற்றுதலும், சுய தூய்மைப்படுத்துதலும், இறையரசின் வளர்ச்சி, உலக மக்களின் நல்வாழ்வு ஆகியவற்றை துறவறத்தார் தங்களது நோக்கங்களாக கொண்டுள்ளனர்.

தொடக்கத்தில், குருத்துவ பணிவிடை, துறவற வாழ்வின் அடிப்படை அம்சமாக பார்க்கப்படவில்லை. தற்போது கூட, குருத்துவம், துறவறவாழ்வின் அவசிய அம்சமாக பார்க்கப்படவில்லை. பெரும்பான்மையான ஆண்களுக்கான துறவற



சமூகத்தில் உறுப்பினர்கள் அனைவரும் குருக்களாக உள்ளதால், துறவறத்தார் அனைவரும் குருக்கள் என்னும் பொதுக் கருத்து இன்று காணப்படுகிறது. அதனாலேயே, குருக்களாக இல்லாத துறவற சமூகங்களில் குறைபாடு உள்ளதாக காணும் நோக்கும் இன்று காணப்படுகிறது. நாம் அறிந்திருக்க வேண்டிய உண்மை என்னவெனில், துறவற வாழ்வு மேற்கொள்வோர், குருக்களாயினும், குருத்துவம் ஏற்காதோராயினும் சமமாகவே பார்க்கப்பட வேண்டும். பிரான்சிஸ்கன் துறவறத்தைச் சார்ந்தவர்கள் குருக்களாயினும் குருக்கள் அல்லாதோராயினும் சகோதரர் என்றே அழைக்கப்படுகிறார்கள். குருக்கள் அல்லாதவர்களையும் அவர்கள் தங்கள் தலைவர்களாக தேர்ந்தெடுக்கும் வழக்கம் அவர்களுக்கு உண்டு. துறவற சகோதரர்கள், இயேசுவை மிக நெருக்கமாக பின்சென்று அவரது அன்புக்கு சாட்சிகளாக வாழ்கின்றார்கள். அவர்கள் திருப்பலிக்கு தலைமை ஏற்பதும் இல்லை, திருவருட்சாதனங்களை நிறைவேற்றுவதும் இல்லை. சீரோ மலபார்ச் சபையைச் சார்ந்த, துறவற சகோதரர்கள், பல்வேறு பணிவிடைகளை குருக்களுக்கும், கன்னியர்களுக்கும் இணையாக செய்து வருகின்றார்கள்.

சீரோ மலபார்த் திருச்சபை இறையழைத்தல் முளைத்தெழும் வளம் மிக்க நிலம் எனலாம். ஏறக்குறைய 5000 துறவறக் குருக்களும், 30,000 துறவற சகோதரிகளும், 170 துறவற சகோதரர்களும் சீரோ மலபார்த் திருச்சபையில் உள்ளனர். ஆனால், சில ஆண்டுகளாக துறவற வாழ்வை ஏற்போரின் எண்ணிக்கை சற்றே குறையும் நிலை காணப்படுகிறது. குடும்பங்களே இறையழைத்தலை உருவாக்கும் இடங்கள். குடும்பங்கள் சந்திக்கும் சவால்கள், இறையழைத்தல்கள் உருவாவதை வெகுவாக பாதிக்கும். குறைந்து வரும் கத்தோலிக்க மக்கள்தொகையின் எண்ணிக்கையும் இறையழைத்தலை பாதிக்கிறது. துறவறத்தாரை இழிவாக சித்தரிக்கும் ஊடகங்கள், மற்றும் குடும்ப கூட்டமைப்புகள் இறையழைத்தலின் பால் உள்ள ஈர்ப்பை குறைக்கிறது.

விசுவாசப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் குருக்கள், துறவற வாழ்வின் மேன்மையை இளைய தலைமுறைக்கு எடுத்துக்கூறுவதோடு, ஆர்வம் காணும் பிள்ளைகளை ஊக்குவிக்கும் முறையில் அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும்.

பிள்ளைகளுக்குள் கிறிஸ்தவ மதிப்பீடுகளை பெற்றோர் ஊட்டி வளர்த்து, இறையழைத்தலை ஊக்குவிக்க வேண்டும். அதைப்போன்று, துறவறத்தாரும், தங்களது முன்மாதிரியான வாழ்க்கை வழியாக, இளம் தலைமுறையை துறவறவாழ்வுக்குள் ஈர்க்க வேண்டும்.

இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் நமக்கு அறிவுறுத்துவதைப் போன்று, நாம் மடாலயங்களிலும், கல்வி நிறுவணங்களிலும், பணிபுரியும் துறவறத்தாரையும், நற்செய்திப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் துறவறத்தாரையும், இறைப்பற்றுடன் இயேசுவின் மணமக்களாக வாழும் அனைத்து துறவறத்தாரையும் நன்றியுடன் நினைவு கூருவதோடு அவர்களை ஊக்கப்படுத்தவும் வேண்டும்.

இந்த துறவற ஆண்டில், திருச்சபைக்குள், துறவற சகோதரர் சகோதரிகளோடு இணைந்து இறைப்பணியில் தங்களையே இணைத்துக் கொள்ளும் அனைத்து மக்களையும் வாழ்த்துவதோடு, அவர்கள் ஆன்மீக மறுமலர்ச்சி அடைய செபிக்கிறேன்.

இயேசுவில் அன்புடன்,

✠ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர்

---

**Pope Francis**

# TWEETS



**Pope Francis** @Pontifex Nov 11
Work is so important for human dignity, for building up a family, for peace!



**Pope Francis** @Pontifex Nov 9
I ask all people of goodwill to help build a culture of encounter, solidarity and peace



**Pope Francis** @Pontifex Nov 8
The Church is ever on a journey, seeking new ways to announce the Gospel.



# உயர் பேராயர் கடிதம்

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர், மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி, அனைத்து பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் குருக்களுக்கும் இருபால் துறவியருக்கும் பொதுநிலையினருக்கும் எழுதுவது,

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய சகோதரர் சகோதரிகளே,

புனித சாவறா குரியாக்கோஸ் எலியாஸ் குறித்தும், புனித எவுப்பிராசியா குறித்தும் இக்கடிதம் வழியாக சில சிந்தனைகளை நான் பகிர ஆசைப்படுகிறேன்.

இந்தியத் திருச்சபையை, குறிப்பாக, சீரோ மலபார்த் திருச்சபையை பொறுத்தவரைக்கும் நவம்பர் 23 ஆம் தேதி மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட நாள் எனலாம். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால், முத்திப்பேறு பெற்ற குரியாக்கோஸ் எலியாஸ் மற்றும், முத்திபேறு பெற்ற எவுப்பிராசியா எலவுத்திங்கல் ஆகியோர், புனிதர்பட்டம் வழியாக மாட்சி மிகு பலிபீடத்திற்கு உயர்த்தப்பட்டார்கள். இறைவார்த்தைக்கு செவிமடுத்து தங்களது வாழ்க்கையை நெறிப்படுத்த இயலாமல் உலக இன்பங்களில் மூழ்கி, மன உளைச்சலுக்குள்ளாகி, நிம்மதியற்று வாழும் நவீன உலகினருக்கு இவ்விருவரும் ஒளி காட்டும் தீபங்களாக மாறி புத்துயிர் ஊட்டுகிறார்கள். முத்திப்பேறு பெற்ற சாவறா குரியாக்கோஸ் அவர்கள். இறை திருவுளத்திற்கு நிரந்தரமாக செவிமடுத்து அதை செயல்முறைப்படுத்தி வாழ்ந்தவர். அவ்வாறாக, செபத்தையும் செயலையும் ஒருமுகப்படுத்தி, பிற மனிதர்கள் வாழ்வில் அக்கறை கொண்டவராய், தேவையில் வாடுவோருக்கு துணையானார். *செபத்தின் தாய்* என்னும் புனைப்பெயரில் அறியப்படும், அருட்சகோதரி எவுப்பிராசியா அவர்கள் எப்போதும் பிறருக்காக பரிந்துரை செபங்களை ஏறெடுத்தார். இறை பிரசன்னத்தின் வல்லமையை நிரந்தரம் உணர்ந்தவராய் வாழ்ந்தார்.

செபத்தை வாழ்வின் அம்சமாக மாற்ற முடியாமல் தவிப்போருக்கு இவ்விருவரும் செபத்தின் மாதிரிகளாக விளங்குகிறார்கள். இந்திய ஆன்மீபத்தின் ஊற்றுக்களாக விளங்கும் பெரும் முனிவர்களுடையவும் துறவியருடையவும், மேலும், இறைவனை தணியாத தாகத்தோடு தேடிய சிரியன் திருச்சபைத்

தந்தையர்களுடையவும் மறுபதிப்புகளாக இவ்விருவரையும் நாம் காணலாம். இவர்கள் சீரோ மலபார்த் திருச்சபைக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் அரிய செல்வம். ஆன்மீகத்திலும், பொருளாதாரத்திலும் திருச்சபையை வளமிக்கதாக்க இவர்கள் ஆற்றிய பணி போற்றுதற்குரியது.

இன்று, சீரோ மலபார்த் திருச்சபையிலிருந்து பலர் இறையழைத்தல் ஏற்று இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நற்செய்தித் தொண்டு ஆற்றுகிறார்கள். அவ்வாறாக, சீரோ மலபார்த் திருச்சபை இந்தியத் திருச்சபைக்கு அளித்திருக்கும் மிகப்பெரிய பங்கு நற்செய்தித் திருத்தொண்டு எனலாம். முத்திப்பேறுப் பெற்ற சாவறா குரியாக்கோஸ் அவர்கள், மண்ணைச் சார்ந்த துறவறச்சபைகளை நிறுவியவருள் குறிப்பிடத்தக்கவர். இவருடைய ஆன்மீகத் தூண்டுதலைப் பெற்று, இன்று 50க்கும் மேற்பட்ட மண்ணைச்சார்ந்த துறவறச்சபைகள் சீரோ மலபார் சபைக்குள் நிறுவப்பட்டு பல்வேறு துறைகளில் தனித்துவத்தோடு செயல்பட்டு வருகின்றன. கேரளச் சபையில் உருவாகி இருக்கும் இந்த திருத்தொண்டு ஆர்வத்தை முன்னரேக் கண்ட திருத்தந்தை பதிமூன்றாம் லியோ (பதிமூன்றாம் சிங்கராயர்) கூறினார், "பாரதமே உன் மீட்பு உன் மக்களில்" (Filii tui India, administri tibi salutis). இந்தியாவிலிருந்து முதலில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட கொன்சாலோ கார்சியாவுக்கு பின்னர், அந்நிலைக்கு உயர்த்தப்பட்டிருக்கும் புனிதர்களான, அல்போன்சா, சாவறா குரியாக்கோஸ் மற்றும் எவுப்பிராசியா ஆகியோர், சீரோ மலபார்த் திருச்சபையை சார்ந்தவர்கள் என்பது மிகுந்த பெருமிதத்தைத் தருகிறது. இப்போது, புனிதர்களாக உயர்த்தப்பட்ட அருட்சகோதரி எவுப்பிராசியா அவர்கள், அருட்தந்தை சாவறா குரியாக்கோஸ் அவர்களால் நிறுவப்பட்ட, சி.எம்.சி. சபையை சர்ந்தவர் என்பதும், நிறுவனத் தந்தையோடு இவரும் புனிதர் நிலையை அடைகிறார் என்பதும் கவனிக்கத்தக்கது. இவ்வேளையில், இந்தியத் திருச்சபையை சார்ந்த இதர முத்திப்பேறுப் பெற்றவர்களான, இரத்தசாட்சி தேவசாகாயம் பிள்ளை, அன்னை தெரசா, மற்றும், சீரோ மலபார் சபையைச் சேர்ந்த மரியம் தெரசியா, தேவர்பறம்பில் குஞ்ஞச்சன் ஆகியோரையும் செபத்தோடு நினைவில் கொள்வோம்.



முதன்மை திருத்தொண்டர் (Archdeacon) என்னும் பதிவிப்பெயரானது, பதினேழாம் நூற்றாண்டிலிருந்து நமது சபையிலிருந்து வழக்கற்று போனது என்பது உண்மையே. ஆயினும் ஓரிரு நூற்றாண்டுகளுக்கு பின்னர், அருட்தந்தை சாவறா குரியாக்கோஸ் அவர்கள் சீரோ மலபார்த் திருச்சபையின் குருகுல முதல்வர் என்னும் பதவி பெற்று சபையை 10 ஆண்டுகள் வழிநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னால் சங்ஙனாசேரி ஆயர் மார் ஜேம்ஸ் காளசேரி அவர்கள் அருட்தந்தை சாவறா அவர்களைக் குறித்து, "உயர்ந்த நற்குணங்களின் இருப்பிடம், விசுவாசத்தின் பாதுகாவலர், சமூக மறுமலர்ச்சி ஏற்படுத்தியவர் என்னும் நிலைகளில் அருட்தந்தை சாவறா குரியாக்கோஸ் அவர்கள், கேரளாவில் நன்மதிப்பைப் பெற்றார்" என்றார். சீரோ மலபார் ஆயர் பேரவை, "கேரளாவில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய மாபெரும் தலைவரான அருட்தந்தை சாவறா குரியாக்கோஸ் அவர்கள், இந்தியாவின் குடிமகன் என்பதும், கேரளத்திருச்சபையின் கொடை என்பதும் நம்மை மகிழ்ச்சி கொள்ள வைக்கிறது" என்று கூறுகிறது.

எனக்கு முன்னால், சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர்களாக இருந்தவர்கள் அருட்தந்தையைக் குறித்து பல சந்தர்ப்பங்களில் கூறியதை நான் இப்போது நினைவு கூர விரும்புகிறேன். 1996 ஆம் ஆண்டு அருட்தந்தை சாவறா குரியாக்கோஸ் அவர்கள் இறந்ததன் 125 ஆம் ஆண்டு நினைவு அனுசரிக்கும் வேளையில், உயர் பேராயர் ஆண்டணி கார்டினல் படியற அவர்கள், "நம்முடைய சபையில் அருட்தந்தை சாவறா குரியாக்கோஸ் அவர்களுக்கு இருக்கும் முக்கியத்துவம் குறித்து, அனைத்து ஆயர்களும், குருக்களும், கன்னியர்களும், இறைமக்களும் சிந்தையில் கொள்ள வேண்டும்" என்று கூறினார். அருட்தந்தை சாவறா அவர்களின் பிறப்பின் 200 ஆம் ஆண்டை நினைவு கூரும் வேளையில், உயர் பேராயர் வர்க்கி கார்டினல் விதயத்தில் அவர்கள் வெளியிட்ட பொது சுற்றுமடலில், "அருட்தந்தை சாவறா அவர்கள், 19 ஆம் நூற்றாண்டில் நிலவிய மத, சமூக, கலாச்சார பிரச்சனைகளுக்கு மத்தியில், சமூகத்திலும், சபையிலும் புது ஆற்றலையும் வாழ்வையும் புகுத்தும் விதத்திலான பல தீர்வுகளை கொண்டு வந்த, கடவுளால் அனுப்பபட்ட மறுமலர்ச்சியாளராக விளங்கினார்" என்று எழுதினார்.

திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள், இந்தியாவுக்கு வந்த வேளையில், கோட்டயத்தில் வைத்து, அருட்சகோதரி அல்போன்சா மற்றும், அருட்தந்தை சாவறா அவர்களை முத்திப்பேறுப் பெற்றவர்களாக அறிவிக்கும் வேளையில், "அருட்தந்தை குரியாக்கோஸ் மற்றும் அவருடைய உடன் துறவறத்தாரும் சீரோ மலபார்ச் சபையின் வளர்ச்சிக்காக தங்களது வாழ்வை அர்ப்பணித்தார்கள். அவர்தம் முயற்சியால் மலர்ந்த, திருத்தொண்டு முன்னெடுப்புகள் தான் என்னென்ன! பள்ளிக்கூடங்கள், குருத்துவ பயிற்சி இல்லங்கள், கத்தோலிக்க விழுமியங்களைப் பரப்ப அச்சகங்கள், கைவிடப்பட்டோருக்கும் சாகும் தருவாயில் இருப்போருக்கும் இல்லங்கள், ஆன்மீகப் பயிற்சிகளுக்கான மையங்கள் ஆகியவை அவருடைய பங்களிப்புகள். அவர் சீரோ மலபார்த் திருச்சபையின், வழிபாட்டு முறையை புதுப்பித்து, திவ்ய நற்கருணை பக்தியையும், திருக்குடும்ப பக்தியையும் மக்கள் மத்தியில் பிரபலமாக்கினார். கிறிஸ்தவ குடும்பங்களுக்கு அறிவுரை கொடுத்ததோடு, சிறந்த வாழ்வு மேற்கொள்ள உறுதுணையானார். சமூகத்திலும், திருச்சபையிலும் குடும்பங்களே அடிப்படை அலகுகளாக விளங்குகின்றன என்பதை அறிவுறுத்தினார். திருச்சபைக்குள்ளே நிலவ வேண்டிய ஒற்றுமையே, அவருடைய திருத்தொண்டுப் பணியின் உயிர்நாடியாக இருந்தது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படுத்தும் அனைத்தையும் தடுத்து நிறுத்த அவர் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும், இவ்வேளையில், திருச்சபை அன்போடும் நன்றியுணர்வோடும் நினைவு கூருகிறது. ஒற்றுமை ஏற்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள், அகில உலக திருச்சபையோடும், பேதுருவின் வழித்தோன்றலோடும் அனைத்து குருக்களும், விசுவாசிகளும் இணைந்திருக்கத் தூண்டுதலாக இருக்கட்டும்."

நவீன குடும்பங்கள் நேரிடும் சவால்களை காணும் போது, குடும்ப வாழ்வுக்கான நெறிமுறிகளை முன்வைக்கும், அருட்தந்தை சாவறா அவர்களுடைய 'நற்தந்தையின் சாவருள்' (The Last Words of a Good Father) என்னும் நூல், அகில உலக திருச்சபையின் ஆராய்ச்சிக்கு உட்படுத்தத் தகுதி பெற்றது என நினைக்கிறேன். குடும்ப ஆண்டிற்கான, சிறப்பு ஆயர் மாமன்றம் இவ்வாண்டு



அக்டோபர் மாதத்தில் உரோமில் நடந்த போது, நான் இந்நூலின் பிரதிகளை அனைத்து உறுப்பினர்களுக்கும் கொடுத்ததை நினைவு கூருகிறேன்.

1877 ஆம் ஆண்டு, திருச்சூரில் உள்ள காட்டூர் என்னும் ஊரில் எலவுத்திங்கல் குடும்பத்தில் பிறந்த அருட்சகோதரி எவுப்பிராசியா, தன்னுடைய துறவற வாழ்வை, அருட்தந்தை சாவறா அவர்களால் நிறுவப்பட்ட கூனமாவு கன்னியர் இல்ல மாணவர் காப்பகத்தில் தொடங்கினார். பல இன்னல்களுக்குப் பிறகு, திருக்குடும்பத்திடமிருந்து பெற்ற காட்சியின் வழியாக தன்னுடைய இறைபழைத்தலில் உறுதி பெற்றார். *திருஇருதயத்தின் எவுப்பிராசியா* என்னும் பெயரை ஏற்று தனது துறவற வாழ்வை அம்பழக்காட்டு கன்னியர் இல்லத்தில் தொடங்கினார். நவகன்னியரின் தலைவியாகவும், ஒல்லூர் கன்னியர் இல்லத் தலைவியாகவும் சில ஆண்டுகள் பணியாற்றினார். அதன் பிறகு, எஞ்சிய காலம் முழுவதும், ஒல்லூர் கன்னியர் இல்லத்தில் *செபத்தின் தாயாக* செலவிட்டார். 1952 ஆம் ஆண்டில் இறையடி எய்திய அவர், தொடர்ந்து இறைவனிடம் ஆசிகளைப் பெற்றுத்தரும் தாயாக பரிணமித்து நிற்கிறார்.

அருட்சகோதரி எவுப்பிராசியா, கன்னியர் இல்ல சிற்றாலயத்தின் ஓரத்தில் அமர்ந்து, திவ்ய நற்கருணை ஆண்டவரை ஆராதித்தவாறு செபமாலை செபித்து திருஇருதய ஆண்டவரின் அன்பின் அட்சய பாத்திரமாக மாறினார். செப உதவி வேண்டி வந்தோருக்கும், துன்பங்களைச் சுமந்து வந்தோருக்கும், ஒளிவீசும் ஆறுதலாக மாறிய அருட்சகோதரி, தேடிவந்தோர் விடைபெற்றச் செல்லும் வேளையில், 'இறந்தாலும் மறக்கமாட்டேன்' (*மரிச்சாலும் மறக்கில்லேட்டோ*) என்று கூறியே வழியனுப்பி வைத்தார். பிறர் அறியா வண்ணம் புனிதையாக வாழவே விரும்பினார். அதனால், தன்னைப் பாராட்டிப் பேசும் சந்தர்ப்பங்களை வேண்டுமென்றே தவிர்த்தார். நற்கருணை ஆண்டவரோடு தன்னையே இணைத்துக் கொண்ட அவர், சிற்றாலயத்தின் ஓரத்தில் தன் வாழ்வை ஒடுக்கிக் கொண்டார். அங்கே, சாதாரண மக்களும் குழந்தைகளும், *செபிக்கும் தாயை* அடையாளம் கண்டனர்.

இவ்விரு புனிதர்களுக்காகவும் நன்றி கூறும் பொருட்டு, *நன்றியறிவித்தல் திருப்பலி*யானது நவம்பர் மாதம் 29 ஆம் தேதி

காக்கனாடு அருகாமையில் உள்ள ராஜகிரியில் ஏற்பாடு செய்யப்பட்டது. கடவுளைப் புகழ்வதற்காக நாம் அங்கே ஒன்றாகக் கூடினோம். 2015 ஆம் ஆண்டு ஜனவரி 03 மற்றும் 10 ஆம் தேதிகளில், முறையே, இவ்விரு புனிதர்களின் கல்லறைகள் அமைந்திருக்கும், மாநானம் மற்றும் ஒல்லூரில், நமது சபையைச் சார்ந்த அனைத்து இறைமக்களும் ஒன்றி கூடி திருவிழா திருப்பலியில் பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன். கிறிஸ்தவ ஒன்றிப்பையும் சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்தும் இச்சந்தர்ப்பங்களில் அனைவரும் பங்கேற்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். புனித சாவறா மற்றும், புனித எவுப்பிராசியா ஆகிய இருவரின் பரிந்துரைகள் நமக்கு வலுவூட்டட்டும். புனிதத்தின் பாதை அகில உலக திருச்சபையை வழிநடத்தும் ஒளிவிளக்காக திகழ்வதாக!

இயேசுவில் அன்புடன்,

✠ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர்

## BIRTHDAY & FEASTDAY OF REV. FATHERS

### FEASTDAY

| | | |
|---|---|---|
| FR. JOHN THEKKEL | : | DECEMBER 27 |
| FR. JOSHY KULATHUMKAL | : | DECEMBER 27 |

### BIRTHDAY

| | | |
|---|---|---|
| FR. FELIX ARULNATHAN | : | DECEMBER 09 |
| FR. ALEX PUTHETTU | : | DECEMBER 16 |
| FR. ANTONY JOSE | : | DECEMBER 18 |
| FR. JOSEPH ANITHOTTAM CMI | : | DECEMBER 18 |
| FR. MATHEUS ROBERT | : | DECEMBER 26 |
| FR. RONEY PEEDIKAYIL MCBS | : | DECEMBER 26 |



## நற்செய்தி நிலையம்

"கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும், தூய்மையிலும் வெளிப்படும்." (எபேசியர் 4:24)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

மறைவட்ட இலக்கிய போட்டிகள்:

2014-2015ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா இலக்கியப் போட்டிகளில் மறைவட்ட அளவில் பரிசு பெற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் வாழ்த்துக்கள். இப்போட்டிகளில் புள்ளிகள் பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் பெயர் விவரம் பின்வருமாறு:

<u>படந்தாலுமூடு</u>

| வ.எண் | பங்கு | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | படந்தாலுமூடு | 16 |
| 2 | பளுகல் | 11 |
| 3 | அண்ணிக்கரை | 9 |
| 4 | தெற்றியோடு | 21 |
| 5 | கழுவன்திட்டை | 23 |
| 6 | அதங்கோடு | 25 |
| 7 | மார்த்தாண்டம் | 3 |
| 8 | குந்நுவிளை | 1 |

<u>தக்கலை-பிலாங்காலை</u>

| வ.எண் | பங்கு | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | பிலாங்காலை | 6 |
| 2 | கைசாலவிளை | 17 |
| 3 | காட்டாத்துறை | 17 |
| 4 | நாகர்கோவில் | 24 |
| 5 | சேணங்கோடு | 30 |
| 6 | பரைக்கோடு | 11 |
| 7 | கல்லுவிளை | 1 |
| 8 | தக்கலை | 1 |

| | | |
|---|---|---|
| 9 | ஆனையடி | 1 |

*சூசைபுரம்*

| வ.எண் | பங்கு | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | சூசைபுரம் | 32 |
| 2 | மாங்கரை | 9 |
| 3 | பிலாங்கரை | 6 |
| 4 | கிள்ளியூர் | 24 |
| 5 | பாலப்பள்ளம் | 21 |
| 6 | தக்காளிவிளை | 6 |
| 7 | மாதாபுரம் | 10 |

*ஆறுகாணி*

| வ.எண் | பங்கு | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | ஆறுகாணி | 37 |
| 2 | பத்துகாணி | 38 |
| 3 | அணமுகம் | 10 |
| 4 | மேழக்கோடு | 12 |
| 5 | நெட்டா | 3 |
| 6 | பேணுத்தடம் | 8 |

*மஞ்சாலுமூடு*

| வ.எண் | பங்கு | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | மஞ்சாலுமூடு | 25 |
| 2 | முழுக்கோடு | 13 |
| 3 | மாலைக்கோடு | 10 |
| 4 | முக்கூட்டுக்கல் | 8 |
| 5 | மாறப்பாடி | 6 |
| 6 | களியல் | 31 |
| 7 | காரோடு | 8 |
| 8 | பள்ளிக்கோணம் | 5 |



| | | |
|---|---|---|
| 9 | தெற்றிவிளை | 1 |
| 10 | பென்கிரி | 1 |

*நித்திரவிளை*

| வ.எண் | பங்கு | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | நித்திரவிளை | 34 |
| 2 | வாறுதட்டு | 18 |
| 3 | வயலின்கரை | 18 |
| 4 | சீனிவிளை | 16 |
| 5 | முஞ்சிறை | 9 |
| 6 | கிறிஸ்துராஜபுரம் | 13 |

விவிலியக் கலை விழா 2014-2015

2014-2015 ஆண்டு விவிலியக் கலைவிழா போட்டிகள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**A.Forane Level Competitions for Students**

Time : 9.00 a.m. – Registration.

| Forane Centre | Date | Place |
|---|---|---|
| Arukany | 26-12-2014 | Holy Family H.S.S., Arukany. |
| Nithiravilai | 27-12-2014 | M.K.K.M., Varuthattu. |
| Thu – Pilankalai | 29-12-2014 | St. Micheal's School,Kattathurai. |
| Soosaipuram | 29-12-2014 | A.P.J.M. H.S.S., Soosaipuram |
| Manjalumoodu | 30-12-2014 | Holy Family H.S.S., Mukkuttukal |
| Padanthalumoodu | 31-12-2014 | Sacred Heart H.S.S., Padanthalumoodu |

**B.Forane Level Competitions for Teachers**

Date: 26-01-2015, Place: S.H. School, Padanthalumoodu.
Time : 9.00 a.m.

## C.Diocesan Level Competitions for Students:

Date : 14-01-2015, Place: S.H. School, Padanthalumoodu.

Time : 8.30 a.m. – Registration

**II. Items:**

*A.Individual Items – Students*

| Section | Boys | Girls |
|---|---|---|
| Sub-Juniors | 1.Single Song – 3mts<br>2.Speech – 3mts<br>3.Bible sent.Recitation – 3mts | 1.Single Song – 3mts<br>2.Speech – 3mts<br>3.Single Dance |
| Juniors | 1.Single Song – 3mts<br>2.Speech – 3mts<br>3.Bible Reading – 3mts | 1.Single Song – 3mts<br>2.Speech – 3mts<br>3.Single Dance |
| Seniors | 1.Single Song – 3mts<br>2.Speech – 3mts<br>3.Mono Act – 5mts | 1.Single Song – 3mts<br>2.Speech – 3mts<br>3.Mono Act– 5mts |
| Sup.Seniors | 1.Single Song – 3mts<br>2.Speech – 3mts<br>3.Mono Act – 5mts | 1.Single Song – 3mts<br>2.Speech – 3mts<br>3.Mono Act– 5mts |

*B.Group Items – Students*

| Section | Items |
|---|---|
| Boys & Girls | 1.Group Song – 5 mts<br>2.One Act Play – 30 mts |

*C.Individual Items – Teachers*

| Section | Items |
|---|---|
| Gents & Ladies | Single Song – 3 mts, Speech – 3 mts, 3.Bible Quiz |

*D.Group Items – Teachers*

Group Song – 7 mts



வட்டாரத் தளத்தில் நடைபெறும் போட்டிகளில் ஒவ்வொரு பங்கிலிருந்தும் ஒரு குழு மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

| Items | Section | Topics |
|---|---|---|
| Speech | Sub-Juniors | பு. சாவறா அடிகளார்: இறை மனிதர் |
| | Juniors | பு. எவுப்பிராசி அம்மையார்: நகரும் நற்கருணைப் பேழை |
| | Seniors | குடும்பம்: தூய மூவொரு இறைவனின் உருவம் |
| | Sup. Seniors | குடும்பம்: திருப்பலி பீடத்தின் தொடர்ச்சி |
| | Teachers | முழு வளர்ச்சியடைந்த குடும்பத்தை உருவாக்க மறைக்கல்வியின் முக்கியத்துவம் |
| Mono Act | Sup. Seniors & Seniors | புனித மார்கு |
| Bible sent. | Sub Junior | திருப்பாடல்கள் 103 : 1-13 |
| One Act Play | Boys | ஆபிரகாமின் குடும்பம் |
| | Girls | யாக்கோபின் குடும்பம் |
| Bible - Quiz | Teachers | அ)1,2திமொத்தேயு ஆ)எபிரேயர் இயாக்கோபு<br>ஈ)1,2,3பேதுரு உ) 1,2,3 யோவான் 90%<br>ஊ)திருவிவிலியம் (G.K.) 10% |

அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில்


இயக்குநர்.

**Pope Francis**

**TWEETS**



**Pope Francis** @Pontifex Nov 18
There is so much noise in the world! May we learn to be silent in our hearts and before God.



**Pope Francis** @Pontifex Nov 15
A Christian brings peace to others. Not only peace, but also love, kindness, faithfulness and joy.

# குழந்தை ஈசோ இயக்கம்

"பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கீழ்படியுங்கள், ஆண்டவரின் அடியவருக்கு இதுவே ஏற்புடையது." (எபே 6:1)

*கருத்தரங்குகள்*

குழந்தை ஈசோ உறுப்பினர்களுக்காக பங்களவிலான கருத்தரங்கு பிலாங்கரை தூய லொரேட்டோ அன்னை ஆலயத்தில் நவம்பர் 17 அன்று உதவி இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில் அவர்கள் தலைமையில் குத்துவிளக்கேற்றுதலுடன் மதியம் 2 மணிக்கு ஆரம்பமானது. குழந்தை ஈசோ இயக்க உறுப்பினர் வரவேற்புரை கூற அருட்சகோதரி றீஜா அவர்கள் குழந்தைகளின் கடமைகள் என்ற தலைப்பில் வகுப்புகளை நடத்தினார். மேலும் செய்கைப்பாடல்கள் மற்றும் சிறுசெபங்களும் பயிற்றுவிக்கப்பட்டது. தொடர்ந்து நன்றி நவில மாலை 4 மணியளவில் நிறைவடைந்தது.

*குழந்தைகள் தின காணிக்கை*

கடந்த ஆண்டைப்போன்று இவ்வாண்டும் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் வழங்கப்படும். குழந்தைகள் வாழ்த்து அட்டையை எடுத்துக்கொண்டு அதன் உறையில் குழந்தைகள் தின காணிக்கை வைத்து திருப்பித்தர கேட்டுக்கொள்கிறோம். பின்னர் குலுக்கல் நடத்தி பரிசுகள் வழங்கப்படும். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்
இயக்குநர்

## நற்செய்தி கொண்டாட்டம் 2014

மறைமாவட்ட 14-வது நற்செய்திக் கொண்டாட்டம் டிசம்பர் 5,6,7 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் நடைபெறுகிறது. தியான குருவும், குணமளிக்கும் வரம் பெற்றவருமான அருட்தந்தை டோமினிக் வாளமனால் மற்றும் சகோ. கிறிஸ்துதாஸ் அவர்கள் நற்செய்தியுரையாற்றுகிறார்கள். இறைமக்கள் யாவரும் கலந்துகொண்டு பயனடைய கேட்டுக் கொள்கிறோம்.



# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

இளம் தலைவர்கள் பயிற்சி முகாம்-2014

தக்கலை மறைமாவட்ட இளைஞர் இயக்கத்தின் இளம் தலைவர்களுக்கான பயிற்சி முகாம் தக்கலை சங்கமத்தில் நவம்பர் 21,22,23 ஆகிய மூன்று நாட்கள் சிறப்பாக நடைபெற்றது. நவம்பர் 21 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் பெயர்பதிவுடன் இயக்குநர் தந்தை பெலிக்ஸ் அவர்களின் இறைவேண்டலோடு ஆரம்பானது. தொடர்ந்து வரவேற்புரையும் சுயஅறிமுகமும் நடைபெற்றது. தொடர்ந்து "திறமையான தலைவர்களுக்கான





தகுதிகள்" என்ற அமர்வை பாளையங்கோட்டை மறைமாவட்ட அருட்தந்தை மரிய தாஸ்sdb அவர்கள் நடத்தினார்கள். இரண்டாம் நாளான செவ்வாய் காலை 7.00 மணியளவில் திருப்பலியும் தொடர்ந்து "தலைவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள், இருக்க கூடாத குணநலன்கள்" என்ற தலைப்பில் விருதுநகர் மறைமாவட்ட விளாத்திக்குளம் பங்குத்தந்தை விஜயன்sdb அவர்கள் அமர்வை நடத்தினார்கள். மதிய விருந்துக்குப்பின் பெருஞ்சிலம்பு இறைபராமரிப்பின் இல்லம் பார்வையிடப்பட்டு

பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடத்தி அங்கிருக்கும் மாற்றுத்திறனாளிகளை மகிழ்வித்து சிறு உதவித் தொகையும் அளிக்கப்பட்டது.



தொடர்ந்து சந்திப்புகள் பற்றிய கருத்துக்கள் பகிரப்பட்டன. நிறைவு நாளான ஞாயிறன்று இயக்குநர் தந்தை அவர்கள் தலைமைப்பண்புகள் பற்றிய அமர்வை நடத்தினார். தொடர்ந்து இவ்வாண்டு சிந்தனைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விசுவாசம், வேலைவாய்ப்பு, போதை பற்றிய குழு விவாதங்கள் நடைபெற்றது. தினமும் செபமாலை , பாடற்பயிற்சி, விளையாட்டுகளும் நடைபெற்றன. பாடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகளை சகோ. ஆரோக்கிய சூசை மற்றும் அருட்சகோ. அபிலாஸ் ஆகியோர்கள் இணைந்து நடத்தினார்கள். அமர்வுகள் காணொளி திரை வழியாக நடைபெற்றன. நிறைவு விழாவில் குருகுல முதல்வர் ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் வாழ்த்துரையும், இளையோர்களின் அனுபவப் பகிர்வும் நடைபெற்றன. தொடர்ந்து தலைவர் செல்வன் அபிஸ் அனைவருக்கும் நன்றிகூற மாலை 4.30 மணிக்கு முகாம் இனிதே நிறைவு பெற்றது. மொத்தம் 31 இளம் தலைவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்வினை சகோ. ஆரோக்கிய சூசை ஒருங்கிணைத்தார்கள்.

செல்வி. அபிஷா

செயலர்

**Pope Francis**

**TWEETS**



Pope Francis @Pontifex · Nov 4

Being humble helps us share the burdens of others.



# Family Apostlate

**Mathru Jothis** : മാതൃ ജ്യോതിസ് ഡിസംബർ മാസ പഠന വിഷയം **ഡിസംബർ 25ലെ തിരുപ്പിറവിയും ഡിസംബർ 28ലെ തിരുക്കുടുംബ** തിരുനാളുമാണ്. ദൗത്യമായി 25 നോമ്പ് ആചരിച്ച് ഉണ്ടിയൽ collection നടത്തി വാർഷികത്തിനായി നൽകുക. കൂടാതെ ക്രിസ്തുമസ് Friendനെ തിരഞ്ഞെടുത്ത് സമ്മാനം നൽകുക. മത്സരം: ഒരു ക്രിസ്തുമസ് വിഭവം (പലഹാരം) ഉണ്ടാക്കിക്കൊണ്ടു വരിക.

**Pre-Marriage Guidance Course** : നവംബറിൽ നടന്ന Course-ൽ 18 യുവതിയുവാക്കൾ പങ്കെടുത്തു. എല്ലാവർക്കും Certificate വിതരണം ചെയ്തു. അടുത്ത Course 2015 ജനുവരി മൂന്നാമത്തെ ആഴ്ച നടക്കും. ജനുവരി മുതൽ Course Fee 500 രൂപയായിരിക്കും. വികാരിയച്ചൻമാർ ഈ കാര്യം അറിയിക്കുക.

**വന്ത് പാറുകൾ പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പ്** : പ്രാർത്ഥനാ ഗ്രൂപ്പിന്റെ ആഭിമുഖ്യത്തിലുള്ള **88**-മത് ഏകദിന ധ്യാനം നവംബർ 2-ാം ശനിയാഴ്ച നടന്നു. 250-ഓളം പേർ പങ്കെടുത്തു. പാലപ്പള്ളം പള്ളിയിൽ ഏകദിന ധ്യാനം 3-ാം ശനിയാഴ്ച നടന്നു. അടുത്ത ഏകദിന ധ്യാനം ഡിസംബർ 2-ാം ശനിയാഴ്ച പളുകൽ ചർച്ചിലും 3-ാം ശനിയാഴ്ച പാലപ്പള്ളം ചർച്ചിലും നടക്കും.

**God's Tithes Club** : ദൈവിക ദശാംശ ക്ലബ്ബിന്റെ നവംബർ മാസ യോഗം 2-ാം ഞായറാഴ്ച Bro. **പോൾ ധനുവച്ചപുരത്തിന്റെ** ഭവനത്തിൽ നടന്നു. ദശാംശമായി ലഭിച്ച 18,000 രൂപ മാറപ്പാടിയിൽ പണിതു കൊണ്ടിരിക്കുന്ന രാജൻ - വിനിത ദമ്പതികളുടെ ഭവന നിർമ്മാണത്തിനായി നൽകി.

**Convention 2014** : രൂപതയുടെ 14-ാമത് ബൈബിൾ കൺവെൻഷൻ ഡിസംബർ 5,6,7 തിയതികളിൽ പടന്താലുമൂട് ചർച്ചിൽ നടക്കും. സുപ്രസിദ്ധ ധ്യാനഗുരുവും, സൗഖ്യ ശുശ്രൂഷകനുമായ Fr. **ഡൊമിനിക് വാളമനാൽ**, Bro. **ക്രിസ്തുദാസ്** എന്നിവർ നേതൃത്വം നൽകും. ഈ അവസരം ഏവരും ഉപകാരപ്പെടുത്തുക.

**Family Year 2014** : കുടുംബ ആണ്ട് പ്രമാണിച്ചുള്ള "**കുടുംബ സംഗമം**" ഡിസംബർ 28 തിരുക്കുടുംബ തിരുനാൾ ദിവസം എല്ലാ പങ്കുകളിലും നടത്തണമെന്ന് ഓർമ്മപ്പെടുത്തുന്നു. തെരുവു നാടകം "**இறை வாக்கினர்**" ഡിസംബർ 2 ന് മേക്കാമണ്ഡപം ചർച്ചിലും ഡിസംബർ 8 ന് പളുകൽ ചർച്ചിലും നടക്കും.

# இல்வாழ்வு இயக்கம்

மாதர் ஜோதிஸ்

டிசம்பர் 25 மற்றும் 28 அன்று கொண்டாடப்படும் கிறிஸ்து பிறப்பு மற்றும் திருக்குடும்பத் திருநாளே டிசம்பர் மாத சிந்தனை ஆகும். திருப்பணியாக 25 நோன்பிருந்து கிடைக்கும் உண்டியல் வரவால் ஆண்டுவிழாவை சிறப்பிப்பதும், கிறிஸ்மஸ் நண்பரை தேர்வு செய்து அவருக்காக செபித்து, கிறிஸ்மஸ் பரிசு வழங்குதலுமாகும். போட்டியாக கிறிஸ்மஸ் பண்டம் தயார் செய்தல் வேண்டும்.

திருமணப்பயிற்சி வகுப்புகள்

திருமணப்பயிற்சி வகுப்புகள் நவம்பர் மாதம் 14 முதல் 16 வரை மூன்று நாட்கள் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. 18பேர் பங்கேற்று சான்றிதழ் பெற்றனர். அடுத்த பயிற்சி 2015 ஜனவரி 3வது வாரம் நடைபெறும். பயிற்சிக் கட்டணம் ரூ500 ஆக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. திருமணப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளச் செய்ய பங்குத்தந்தையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வந்து பாருங்கள் செபக்குழு

வந்துபாருங்கள் செபக்குழுவின் 88-வது ஒருநாள் தியானம் நவம்பர் 2வது சனிக்கிழமை அன்று பளுகல் ஆலயத்திலும், 89-வது ஒருநாள் தியானம் நவம்பர் 2வது சனிக்கிழமை அன்று பாலப்பள்ளத்திலும் நடைபெற்றது. 250க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். டிசம்பர் மாத தியானம் டிசம்பர் 2வது சனிக்கிழமை பளுகலிலும், டிசம்பர் 3வது சனிக்கிழமை பாலப்பள்ளத்திலும் நடைபெறும். திரளான மக்களைப் பங்கேற்கசெய்ய பங்குத் தந்தையர்களும், அருட்சகோதரிகளும் உற்சாகப்படுத்த கேட்டுக்கொள்கிறோம்.

தசாம்சா கிளப்

இறைதசாம்சா கிளப்பின் நவம்பர் மாத கூடுகை நவம்பர் 9 அன்று திரு.பால் தனுவச்சபுரம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தசமமாக கிடைத்த 18000ரூபாய் மாறப்பாடி



திரு.ராஜன்-வினிதா என்ற ஏழைத் தம்பதியினரின் வீடு பணிக்காக வழங்கப்பட்டது.

குடும்ப ஆண்டு 2014

குடும்ப ஆண்டு பணிக்குழுவினரால் நடத்தப்படும் இறைவாக்கினர் தெருநாடகம் நவம்பர் 14 அன்று பாலப்பள்ளத்திலும், டிசம்பர் 2 அன்று கைசாலவிளையிலும் காண்பிக்கப்பட்டது. டிசம்பர் 8 அன்று பளுகலில் காண்பிக்கப் படுகிறது. குடும்ப ஆண்டு நிறைவை முன்னிட்டு திருக்குடும்ப திருநாளான டிசம்பர் 28 அனைத்து பங்குகளிலும் குடும்ப சங்கமம் நடத்திட கேட்டுக்கொள்கிறேன்.

அருட்தந்தை ஜோசப் நெடும்புறம்
இயக்குநர்

---

## மறைமாவட்ட தினவிழா

தக்கலை மறைமாவட்டத்தின் 18வது மறைமாவட்ட தின விழா நவம்பர் 8 சனிக்கிழமை ஆசீர் அரங்கத்தில் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காலை 9.30 மணியளவில் ஆயருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. பின்னர் நன்றி திருப்பலியும் தொடர்ந்து விழாக்கூட்டமும் நடைபெற்றது. குருகுல முதல்வர் அவர்கள் வரவேற்புரையும், ஆயர் அவர்கள் தலைமையுரையும், திருமதி சின்னம்மா சேவியர் வாழ்த்துரையுமாற்றினார்கள். அருட்பணிப்பேரவை இணைச்செயலர் திரு.ஜாண் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார். தொடர்ந்து மறைமாவட்டத்தில் சிறந்த பங்காற்றிய செம்மல்களின் சேவையை பாராட்டி பொன்னாடை போர்த்தி சேவைச்செம்மல் விருதுகள் வழங்கப்பட்டன. இடையிடையே கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நிறைவில் ஆவணக் காப்பாளர் பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் நன்றி நவில மறைமாவட்ட கீதத்துடன் மதியம் 2.00 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.



# புனித வின்சென்ட் தே பவுல் சபை

## மஞ்சாலுமூடு வட்டார சபை ஆண்டு விழா

மஞ்சாலுமூடு வட்டார சபையின் ஆண்டு விழாவானது 16.11.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 2.00 மணிக்கு குமாரகோவில் ``பெத்சாய்தா'' ஆசிரமத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சகோ. ராஜா எறிக் காட்வின் அவர்கள் தலைமை தாங்கினார். தொடக்க செபத்துடன் சிறப்பாக ஆரம்பமான இவ்விழாவில் மஞ்சாலுமூடு ஆண்கள் கிளைச்சபை பொருளர் சகோ. சுரேஷ் குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். தமிழக மண்டல சபை செயலரும் தக்கலை மத்திய சபை மூத்தத் துணை தலைவருமான சகோ. சௌந்தரராஜ், தக்கலை மத்திய சபையின் ``காருண்யா நிதி'' இயக்குநர் சகோ. ஜோஸ் பெருமன ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

ஆசிரம பொறுப்பாளர் பேரருட்தந்தை மாத்யு குழிஞ்ஞாலில் அவர்கள் ஆத்மீக உரையாற்றினார். இறுதியில் வட்டார சபை தலைவர் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

## கல்வி உதவித் தொகை வழங்கும் விழா

முழுக்கோடு புனித வின்செண்ட் தே பவுல் ஆண்கள் மற்றும் பெண்கள் கிளைச்சபைகள் சார்பில் 19-10-2014 அன்று கல்வி உதவித் தொகைகள் வழங்கப்பட்டன. உயர்கல்வி பயின்று வரும் மாணவ மாணவியருக்கு ரூ. 5000, ரூ. 4000 மற்றும் ரூ. 3000 என மெத்தம் 25,000 ரூபாய் அந்தந்த மாணவர்களின் வீடுகளுக்கு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சாக்கோ பேசில் அவர்களோடு சென்று கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

சகோ. சுரேஷ் குமார்,
செய்தித்தொடர்பாளர்.

**Pope Francis**
**TWEETS**



Pope Francis @Pontifex Nov 27
Love is the measure of faith.



# கன்னியாகுமரி சமூக சேவை அமைப்பு

## வர்ணம் 2014



குழந்தைகள் தினத்தை முன்னிட்டு பள்ளிகள் சங்கமிக்கும் மாவட்ட அளவிலான ஓவியம் மற்றும் சுவரொட்டி வடிவமைத்தல் சிறப்புப் போட்டிகள் நவம்பர் 24 அன்று கல்லு விளை ஆசீர் அரங்கத்தில் நடைபெற்றது. அருட்தந்தை மாத்யூ குழிஞாலில் அவர்கள் தொடக்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினராக தக்கலை துணைக் கல்வி அலுவலர் திரு சேம்ராஜ் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். 33 பள்ளிகளிலிருந்து 80க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு தங்கள் பிரிவுகளுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஓவியங்களும், சுவரொட்டிகளும் தயாரித்தனர் வெற்றிபெற்ற மாணாக்கர்களுக்கு பரிசுத்தொகை விருதுகளும், பங்கேற்ற அனைவருக்கும் பங்கேற்பாளர் சான்றிதழும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் திரு.ஆரோக்கிய சூசை அவர்கள் ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு "மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை கண்டறிவது எவ்வாறு? வளர்த்துவது எவ்வாறு?" என்பது பற்றிய குறும்படங்களை காண்பொலி வழியாக நடத்தினார். தொடர்ந்து நன்றியுரையும், தேசிய கீதமும் இசைக்க வர்ணம் இனிதே நிறைவடைந்தது.

## Edu fair

மாணவர்கள் தங்கள் மேற்படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு பற்றி தெரிந்து கொள்ளவும், தேர்ந்தெடுக்கவும் பற்றிய edu fair நிகழ்ச்சி தூய அல்போன்சா பள்ளி வளாகத்தில் நவம்பர் 1அன்று கன்னியாகுமரி சமூக சேவை அமைப்பால் நடத்தப்பட்டது. தூய

அல்போன்சா மாணவர்களின் இறைவேண்டுதலோடும், இயக்குநர் அருட்தந்தை சஜி அவர்களின் வரவேற்புரையோடும் தொடக்க விழா



நிகழ்வு ஆரம்பமானது. சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் குத்து விளக்கேற்ற, இந்துக் கல்லூரி முதல்வர் முனைவர் பெருமாள் அவர்கள் விழா உரையாற்றினார். தொடர்ந்து அமர்வுகள் நடைபெற்றது. முதல் மற்றும் மூன்றாம் அமர்வை முனை.ஜினோ ஜாய் அவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் உயர்கல்வி என்ற தலைப்பிலும், இரண்டாம் அமர்வை முனை.மணி அவர்கள் குடியியல் பணிகள் (சிவில் சர்வீஸ்) மற்றும் மருத்துவம் பற்றியும் நடத்தினார்கள். இடையிடையே கல்விசார் குறும்படங்களும் ஆவணப்படங்களும் காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் 11 கல்லூரிகளும், 10பள்ளிகளும் கலந்து கொண்டன.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்
இயக்குநர்

## Pope Francis TWEETS



**Pope Francis** @Pontifex Nov 9
I ask all people of goodwill to help build a culture of encounter, solidarity and peace



**Pope Francis** @Pontifex Dec 2
The Church is called to draw near to every person, beginning with the poorest and those who suffer.



**Pope Francis** @Pontifex Dec 2
Slaves no more. We are all brothers and sisters



## கல்விப் பணித்தளம்

2014-15ம் கல்வி ஆண்டின் கல்வி மாவட்டங்களுக்கிடையேயான மண்டல அளவிலான குடியரசு தின தடகளப் போட்டிகள் 14-11-2014 அன்று கோணம் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் முக்கூட்டுக்கல் திருக்குடும்ப மேனிலைப் பள்ளி மாணவி ஷைனி கலந்துகொண்டு 100மீ தடைதாண்டும் போட்டியில் வெற்றிபெற்று டிசம்பர் மாதம் மதுரையில் நடைபெறும் மாநில அளவிலான குடியரசு தின தடகளப் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவியையும், பயிற்சியளித்த உடற்கல்வி ஆசிரியர் திரு.வில்சன் அவர்களையும் பள்ளித்தாளாளர் அருட்தந்தை ஜோண்சிலால், நிர்வாகி அருட்தந்தை ஜேக்கப் சக்கறியா, தலைமையாசிரியர் திரு.ஜயாத்துரை மற்றும் ஆசிரியர்களும் பாராட்டினர். மாநில அளவில் பரிசு பெற வாழ்த்துக்கள்...

## எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுடன் இணைந்து நடக்கிறது திருஅவை

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு தேவையானவற்றை ஆற்றுவது மட்டுமல்ல, அவர்களோடு இணைந்து நடப்பதும் கத்தோலிக்கத் திருஅவையின் முக்கியப் பணியாக உள்ளது என அறிவிக்கிறது அனைத்துலக கத்தோலிக்க காரித்தாஸ் அமைப்பு. 'இடைவெளியை அகற்றுவோம்' என்ற தலைப்புடன் இம்மாதம் முதல் தேதி, திங்களன்று சிறப்பிக்கப்பட்ட உலக எய்ட்ஸ் நோயாளர் நாளையொட்டி செய்தி வெளியிட்டுள்ள காரித்தாஸ் பிறரன்பு அமைப்பு, கத்தோலிக்கத் திருஅவையின் பணிகள் அனைத்தும் கடந்த 30 ஆண்டுகளில் எய்ட்ஸ் நோயால் உயிரிழந்துள்ள 3 கோடியே 90 இலட்சம் மக்களின் நினைவுகளை கௌரவிக்கும் விதமாக, அவர்களின் உறவினர்களுக்கான பணியாக உள்ளன எனத் தெரிவித்துள்ளது.